DECEMBER 2024 **P/ID 35314/PTL1D**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. தமிழ்விடுதூது நூற்குறிப்புத் தருக.

2. தமிழ்மொழி எவ்வாறு வளர்ந்தது எனத் தூது நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்?

3. ஆதி யாப்பு எட்டு எது?

4. முக்கூடற்பள்ளு நூலமைப்பினைச் சுட்டுக.

5. இளைய பள்ளியை அறிமுகப்படுத்துக.

6. குறவஞ்சி இலக்கியம் என்றால் என்ன?

7. திரிகூடராசப்பக் கவிராயர் யார்?

8. கலம்பகம் - பொருள் தருக.

9. நந்திவர்மனின் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

10. கலிங்கத்துப் பரணி - பெயர்க்காரணம் கூறுக.

11. களம்பாடியது குறித்துக் கூறுக.

12. கருநாகரனின் வில்திறன் எத்தன்மையது? விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. தலைவி தமிழ்மொழியைத் தூதுப் பொருளாகத் தேர்ந்தெடுத்தற்கானக் காரணத்தை எடுத்துரைக்க.

14. ஆசூர் வடகரை நாட்டு வளம் - தென்கரை நாட்டு வளம் ஒப்பிட்டாய்க.

15. வசந்தவல்லியின் பந்தாடற்ச் சிறப்பினை வெளிப்படுத்துக.

16. நந்திக் கலம்பகம் தோன்றிய வரலாற்றினை விளம்புக.

17. நந்திவர்மனின் போர்த்திறத்தினை எடுத்தியம்புக.

18. பேய்கள் உணவு உண்ட முறையை எடுத்துரைக்க.

19. கடல்மல்லைக் காவலன் யார்? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. தமிழ்மொழியின் சிறப்புகளாகத் தமிழ்விடுதூது நூலாசிரியர் குறிப்பிடும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

21. முக்கூடற்பள்ளுவின் வழி அறியலாகும் மழைவளம் குறித்துக் கட்டுரை வரைக.

22. திரிகூடராசப்பக் கவிராயரின் கவிச்சிறப்பினை குற்றாலக் குறவஞ்சியின் வழிநின்று ஆய்க.

23. மூன்றாம் நந்திவர்மனின் தமிழ்ப்பற்றும் தமிழ்ச்சிறப்பும் குறித்துக் கட்டுரைக்க.

24. கலிங்கத்துப் பரணியின் தனித்தன்மையை விவரிக்க.

———————